**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **செல்வம்** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**9.1.2024 OS No.11/2020 வா.சா.2 செல்வம் ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் யார் யார் என்று எனக்கு தெரியும் என்றால் தெரியும். தனசேகரன், குமார், சங்கிலி ஆவார்கள். தனசேகரன், குமார், சங்கிலி ஆகிய மூவரும் சேர்ந்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். குமார் எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்றால் அகமுடையார் ஆவார். தனசேகரன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்றால் கோனார் ஆவார். குமாரின் அப்பா பெயர் என்ன என்றால் கருப்பையாசேர்வை ஆகும்.

2. நானும், குமாரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். குமாரை தவிர எனக்கு மனோகரன் என்ற உடன்பிறந்த சகோதரும் உள்ளார். வழக்கு நடத்துவது சம்மந்தமாக எங்கள் சமுதாயத்தில் கூட்டம் போட்டு முடிவு செய்தோமா என்றால் இல்லை. என் தகப்பனார் கருப்பையா என்பதற்கு என்னிடம் ஏதேனும் அடையாள அட்டை உள்ளதா என்றால் உள்ளது. (சாட்சி தனது ஆதார் அட்டையில் தகப்பனார் பெயர் இருப்பதை காண்பித்தார்.) செல்வம் த/பெ.கருப்பையா என்றுதான் உள்ளது.

3. எங்கள் ஊரில் சங்கையாகோவில், முனியாண்டி கோவில் உள்ளதா என்றால் உள்ளது. சங்கையாகோவில் யாதவர் சமூகத்தில் குலதெய்வமாக வழிபட்டுவருகிறார்கள் என்றால் அது கிராமத்து கோவில் ஆகும். முனியாண்டி கோவில் அகமுடையார் ச மூகத்தைச் சேர்ந்தவர்கள் குலதெய்வமாக வழிபட்டுவருகிறார்கள் என்றால் அது அனைவருமே வழிபட்டுவருகிறோம். முனியாண்டி கோவிலில் நான் பூசாரியாக உள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் கருப்பையா பூர்விகம் மானாமதுரை தாலுகா, முருகபாஞ்சான்வேலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றால் இல்லை. துாதை கிராமத்தைச் சேர்ந்தவர்.

4. எங்கள் காவல்காரகுடும்பம் என்றால் சரிதான். அந்த அடிப்படையில்தான் நாங்கள் துாதை கிராமத்திற்கு வந்தோம் என்றால் சரியல்ல. பூர்விகமாகும். துாதை கிராமத்தில் அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை குடும்பம் இருப்பார்கள் என்றால் 50-60 குடும்பத்தினர் இருப்பார்கள். விலங்குகருப்பணசாமிகோவிலில் எங்கள்

சமுதாயத்தினர் எத்தனை பேர் சாமியாடுவார்கள் என்றால் 10 பேர் இருப்போம். அகமுடையார் சமுகத்தைச் சேர்ந்த 50 குடும்பத்தினரும் விலங்குகருப்பணசாமியை கும்பிடமாட்டோம் என்றால் சரியல்ல.

5. 50 குடும்பத்தினரும் கும்பிடுவோம். விலங்குகருப்பணசாமி கோவிலில் பூசாரிகள் அரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். விலங்குகருப்பணசாமி கோவிலில் பரம்பரையாக பூசாரிகளாக அரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் உள்ளார்கள் என்றால் சரிதான். விலங்குகருப்பணசாமி கோவிலுக்கு உருவ வழிபாடு இல்லை என்றால் சரிதான். வன்னிமரத்தை வணங்குவோம். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு நான் நீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருக்கிறேனா என்றால் இல்லை.

**( வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.